## தரிசனம்...



அவிநாசி கருணாம்பிகையம்மன் உடனமர் அவிநாசிலிங்கேஸ்வரர் கோயிலில் திங்கள்கிழமை தரிசனம் செய்த தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

# வெள்ளக்கோவிலில் மதுபானக்கூடம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து ஆட்சியரிடம் மனு

**திருப்பூர், ஜன. 6:** வெள்ளக்கோவிலில் தனியார் மதுபானக்கூடம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைகேட்புக் கூட்டம் ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில், வெள்ளக்கோவில் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது:

வெள்ளக்கோவில் பகுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் ஏராளமானவர்கள் வசித்து வருகின்றனர். வெள்ளக்கோவில் பேருந்து நிலையத்தில் இருந்து உப்புபாளையம் செல்லும் சாலையில் கார்மேகம் திருமண மண்டபத்தில் நவீன வசதிகளுடன் (எம்.எல்.2) என்ற பெயரில் மதுபானக்கூடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதனருகே அஞ்சலகம், சர்வோதய சங்கம், பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், வீரகுமார சுவாமி கோயில், ஐயப்பன் கோயிலும் மிக அருகில் உள்ளது. எனவே, பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைக்கவுள்ள இந்த மதுபானக்கூடத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெள்ளக்கோவிலில் மதுபானக்கூடம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து ஆட்சியரிடம் மனு அளிக்க வந்த பொதுமக்கள்.

**மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை:**

தேனி மாவட்டம், அழகாபுரி இந்திரா நகரைச் சேர்ந்த மோகன் தாஸ் என்பவர் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

திருப்பூர் மாநகராட்சிக்குள்பட்ட செவந்தாம்பாளையத்தில் உள்ள தனியார் ராணுவ பயிற்சி மையத்தில் மத்திய அரசு பணியில் சேர பயிற்சி அளிப்பதாக கடந்த 2020 ஆம் ஆண்டு விளம்பரம் வெளியாகியிருந்தது.

அதில் குறிப்பிட்டிருந்த எண்ணைத் தொடர்புகொண்டபோது குபேந்திரன் என்பவர் பேசினார். அப்போது அவர், எல்லை பாதுகாப்புப் படை அதிகாரியாகப் பணியாற்றி வருவதாகவும், மாநில மற்றும் மத்திய அரசு அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், பயிற்சி மையத்தில் சேர்ந்தால் 3 மாதங்களில் மத்திய அரசுப்பணி உறுதியாகக் கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இதையடுத்து, ரூ.35 ஆயிரம் கட்டணம் செலுத்தி பயிற்சி மையத்தில் சேர்ந்தேன். அங்கு என்னுடன் 30 பேர் பயிற்சி பெற்றனர்.

பின்னர், வேலைகுறித்து கேட்டபோது ரூ.15 லட்சம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார். இதனால், பல தவணைகளாக வங்கியிலும், நேரிலுமாக ரூ.13 லட்சம் வழங்கினேன். அப்போது, மத்திய அரசுப் பணியில் சேர்வதற்கான ஆணை விரைவில் வீடுதேடி வரும் என்று தெரிவித்தார்.

பின்னர், வீட்டுக்கு வந்த பணியாணை மீது சந்தேகமடைந்து விசாரித்தபோது போலியானது என்று தெரியவந்தது. இதுகுறித்து குபேந்திரனிடம் கேட்டபோது பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகக் கூறி ரூ.5.50 லட்சத்துக்கு 3 காசோலைகளை வழங்கினார். அந்த காசோலைகளை வங்கியில் செலுத்தியபோது பணம் இல்லாமல் திரும்பி வந்தது. இதுகுறித்து குபேந்திரனிடம் கேட்டபோது உசிலம்பட்டியைச் சேர்ந்த பால்பாண்டி என்பவர் மூலம் சென்னையைச் சேர்ந்த பிரசாத்குமார் என்பவரிடம் பணம் கொடுத்திருப்பதாகக் கூறினார்.

இதற்கிடையே, திருப்பூரைச் சேர்ந்த செல்வம் என்பவர் தொடர்புகொண்டு அதிகாரிகளிடம் நல்ல பழக்கம் இருப்பதாகவும், குபேந்திரனிடம் பணத்தை வாங்கிக் கொடுப்பதாகவும் கூறி காலம் தாழ்த்தி வந்தார்.

இந்திய உணவுக் கழகம் பெயரில் போலியான பணியாணை வழங்கி மோசடி செய்த குபேந்திரன், பாண்டி, பிரசாத்குமார், செல்வம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**392 மனுக்கள் அளிப்பு:**

குறைகேட்புக் கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 392 மனுக்களைப் பொதுமக்கள் அளித்தனர்.

# நிஃப்ட்-டீ கல்லூரியில் சர்வதேச வேஷ்டி தின விழா



சர்வதேச வேஷ்டி தின விழாவில் பாரம்பரிய உடையில் பங்கேற்ற மாணவர்கள்.

**திருப்பூர், ஜன. 6:** திருப்பூர் நிஃப்ட்-டீ கல்லூரியில் சர்வதேச வேஷ்டி தின விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

சர்வதேச வேஷ்டி தின விழா ஆண்டுதோறும் ஜனவரி 6-ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி திருப்பூர் நிஃப்ட்-டீ கல்லூரியில் ஃபேஷன் ராம்ப் ஷோ நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். இதில், ஆடை வடிவமைப்பு மற்றும் ஃபேஷன் துறை மாணவர்கள் பல விதங்களில் வேஷ்டி அணிந்தும், பெண்கள் சேலை அணிந்தும் பங்கேற்றனர்.

# அவிநாசியில் பழைமையான ஆலமரத்தை பாதுகாக்க வலியுறுத்தல்

**அவிநாசி, ஜன. 6:** அவிநாசியில் பழைமையான ஆலமரத்தை பாதுகாக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அவிநாசி - மடத்துப்பாளையம் மாகாளியம்மன் கோயில் அருகே 150ஆண்டுகள் பழமையான ஆலமரம் உள்ளது.

இந்நிலையில், இந்த மரத்தை அகற்றுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

எனவே, பழைமையான இந்த மரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



## பாராட்டு.....



கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவியதன் வெள்ளி விழாவையொட்டி திருப்பூரில் அண்மையில் நடைபெற்ற பேச்சு, ஓவியப் போட்டி உள்ளிட்டவற்றில் வெற்றி பெற்ற திருமுருகன்பூண்டி அம்மாபாளையம் நகராட்சி நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவிகளைப் பாராட்டிய பள்ளி நிர்வாகிகள்.

# பொங்கலூரில் நாளை காய்கறி சாகுபடி பயிற்சி முகாம்

**பல்லடம், ஜன. 6:** பொங்கலூரில் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் சர்மிளா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொங்கலூர் வட்டார தோட்டக்கலைத் துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அத்மா) திட்டத்தின்கீழ் வட்டார அளவிலான பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இதில், காய்கறி சாகுபடியில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை, பூச்சி கட்டுப்பாட்டு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

எனவே, பொங்கலூர் வட்டாரத்துக்குள்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் ஆதார் அட்டை நகல் கொண்டுவர வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு தோட்டக்கலை அலுவலர்கள் சம்பத் - 91592 73869, கோகுல்ராஜ்- 95248 47465, ஜெயராணி- 95857 20827, தமிழி- 90956 30870 ஆகியோரைத் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விபத்து வழக்கில் இழப்பீடு வழங்காததால் அரசுப் பேருந்து ஜப்தி

**திருப்பூர், ஜன. 6:** விபத்து வழக்கில் இழப்பீடு வழங்காததால் அரசுப் பேருந்து திங்கள்கிழமை ஜப்தி செய்யப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், சாமளாபுரத்தைச் சேர்ந்தவர் பிரபாகரன் (34). இவர் கோவையில் நில அளவையராகப் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், கடந்த 2018-ஆம் ஆண்டு ஊத்துக்குளியை அடுத்த பல்லகவுண்டம்பாளையம் அருகே அரசுப் பேருந்தில் சென்றபோது பேருந்து விபத்தில் சிக்கியது. இதில் பலத்த காயமடைந்த பிரபாகரன் சிகிச்சைக்குப் பின் உயிர் பிழைத்தார்.

இதைத்தொடர்ந்து, விபத்து இழப்பீடு கேட்டு திருப்பூர் மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவருக்கு ரூ. 8 லட்சம் இழப்பீடு வழங்க அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு நீதிபதி உத்தரவிட்டார். ஆனால், பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கவில்லை. இதையடுத்து, அரசுப் பேருந்தை ஜப்தி செய்ய நீதிபதி ஸ்ரீகுமார் அண்மையில் உத்தரவிட்டார்.

அதன்பேரில், நீதிமன்ற ஊழியர்கள் கோவை மண்டல அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான பேருந்தை ஜப்தி செய்து நீதிமன்ற வளாகத்துக்கு திங்கள்கிழமை கொண்டு சென்றனர். இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் தரப்பில் வழக்குரைஞர் பாலகுமார் ஆஜராகினார்.

# பல்லடத்தில் 'தை மகளே வா' பொங்கல் விழா

**பல்லடம் ஜன. 6:** பல்லடத்தில் தைத்திருநாளை வரவேற்கும் விதமாக 'தை மகளே வா' பொங்கல் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தாய் அறக்கட்டளை சார்பில் வனாலயத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பொது மக்கள் பலர் கலந்துகொண்டு பொங்கல் வைத்து வழிபட்டனர். தொடர்ந்து, உறியடி உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், இளவட்டக்கல் தூக்குதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. பறையாட்டம் உள்ளிட்ட பல்வேறு நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இதன் ஒருபகுதியாக பழங்கால பொருள்களான ரேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, ஏர் கலப்பை மற்றும் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வகையான பொருள்களின் கண்காட்சி நடைபெற்றது.



வனாலயத்தில் பொங்கல் வைத்து கொண்டாடிய பொதுமக்கள்.

மேலும், காங்கேயம் காளை, குள்ள மாடு, கிடாய் ஆடு ஆகியவற்றின் கண்காட்சியும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு உழவன் விருது, சமூகப்பணி விருது, நாட்டுப்புற கலைகள் விருது, தைமகள் சிறப்பு விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து மாலை நடைபெற்ற விழாவில் எழுத்தாளர் பவாசெல்லத்துரை பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பல்லடம் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் கரைப்புதூர் நடராஜன், சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பின் மாநில அமைப்பாளர் அண்ணாதுரை, தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ரத்தினசாமி, தாய் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தாராபுரத்தில் திமுக சார்பில் இன்று ஆர்ப்பாட்டம்

**திருப்பூர், ஜன. 6:** தமிழக ஆளுநரைக் கண்டித்து திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் தாராபுரத்தில் செவ்வாய்க்கிழமை (ஜனவரி 7 ) ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநகராட்சி 4-ஆவது மண்டலத் தலைவருமான இல.பத்மநாபன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

திமுக தலைமை உத்தரவின்பேரில் தமிழகத்தையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர். என்.ரவியைக் கண்டித்தும், மத்திய அரசின் கோபத்தை திசைமாற்ற முயற்சிக்கும் அதிமுக-பாஜக கள்ளக்கூட்டணியைக் கண்டித்தும் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

தாராபுரம் அண்ணா சிலை அருகே காலை 10 மணி அளவில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்ட திமுகவுக்கு உள்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை வார்டு நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளி தூக்கிட்டு தற்கொலை

**அவிநாசி, ஜன. 6:** அவிநாசி அருகே தனியார் நிறுவன தொழிலாளி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திருவாரூரைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் மகன் அஜித் குமார் (28). இவர், அவிநாசி அருகே தெக்கலூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், அவர் தங்கியிருந்த அறைக்கு அருகே காட்டுப் பகுதியில் உள்ள மரத்தில் திங்கள்கிழமை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தகவலறிந்து வந்த அவிநாசி போலீஸார் சடலத்தை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


**OMKARA** ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.**

பெருநிறுவன அடையாள எண் (CIN): U67100TZ2014PTC020363

பெருநிறுவன அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028. கைப்பேசி: +91 7558392736

**[பிற்சேர்க்கை-IV-A] [பார்க்க விதி 8(6) r/w 9(1)] அசையாச் சொத்தின் E-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("SARFAESI சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) r/w 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

[illegible]

| கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பெயர் | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள் | சொத்தின் உரிமையாளர் | கோரிக்கை அறிவிப்பு நாளும் கோரப்பட்ட தொகையும் | குறைந்தபட்ச விலை | டெபாசிட் தொகை (EMD) | விலைப்புள்ளி அதிகரிப்புத் தொகை |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| திருப்பூர் சூர்யா ஹைடெக் அப்பாரெல் பிரைவேட் லிட். (கலைப்புநிலையின் கீழ்) கடன்தாரர், திரு. K. குப்புசாமி, திருமதி. K.ராதாம்பிகை, திரு.K.கார்த்திக், திரு.S.ஹரிஹரசிவசுப்பிரமணியன், செல்வி K. சூர்யா, செல்வி. K.பழனத்தாள் (ஜாமீன்தாரர்கள்) | தொழிற்சாலை நிலம் & அதிலுள்ள கட்டடம் SF எண் 663, TS எண். 1163/28/2 பிளாக் எண் 8, அமைவிடம்: பிள்ளையார் கோவில் தோட்ட வீதிகள், தொட்டிப்பாளையம் கிராமம், (சூர்யா நகர்), லட்சுமி நகரிலிருந்து கிழக்கே, திருப்பூர் வட்டம் & மாவட்டம், தமிழ்நாடு மாநிலம், பரப்பளவு 0.86 சென்ட் நிலம் கட்டடத்துடன் அமைந்துள்ளது. அட்சரேகை: 11.116283, தீர்க்கரேகை: 77.344464 ( அடையாள சுவாதீனத்தின் கீழ்) | திரு. K.குப்புசாமி | நாள்: 20.09.2016 தொகை: ரூ. 118,09,31,035/- (ரூபாய் நூற்று பதினெட்டு கோடியே ஒன்பது லட்சத்து முப்பத்தோராயிரத்து முப்பத்தைந்து மட்டும்) 31.01.2016 அன்றுள்ளபடியான இத்தொகையுடன் சேர்த்து, சேர்ந்துள்ள வட்டி மற்றும் வட்டி மற்றும் பிற கட்டணங்கள் | ரூ. 4,37,00,000/- | ரூ. 43,70,000/- | ரூ. 5,00,000/- |

கணக்கு எண்: 50516612869, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 25/2019-20 டிரஸ்ட், வங்கியின் பெயர்: இந்தியன் வங்கி, கிளை: BKC, மும்பை, IFSC எண்: IDIB000B845.

E-ஏல நாள் மற்றும் நேரம்: 29.01.2025 (புதன்கிழமை) , முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல்12:00 (மதியம் ) வரை

ஏலத்தில் பங்கேற்பதற்கான கடிதம் / KYC ஆவணம் / EMD செலுத்திய ஆதாரம் ஆகியவை சமர்ப்பிக்க கடைசி நாள்: 28.01.2025 (வியாழக்கிழமை) மாலை 6:00 மணி வரை

ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய http://omkaraarc.com/auction.php என்ற இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க. [illegible] கடைசி நாள் 28.01.2025 அன்று மாலை 06:00 மணி வரை. [illegible]

நாள் : 07.01.2025
இடம் : மும்பை

அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட். (ஓம்காரா PS 25/2019-20 டிரஸ்ட்டின் டிரஸ்டி என்ற முறையில்)


## இலவச மருத்துவ முகாம்...



பல்லடத்தை அடுத்த அருள்புரம் ஜெயந்தி பப்ளிக் பள்ளியில் ஆதார் மருத்துவமனை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற இலவச கண், பல் மற்றும் பொது மருத்துவ முகாமில் பங்கேற்ற பள்ளி தாளாளர் கே.கிருஷ்ணன், முதல்வர் எஸ்.மலர்விழி உள்ளிட்டோர்.

## பொறுப்பேற்பு...



திருப்பூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தனது அலுவலகத்தில் திங்கள்கிழமை பொறுப்பேற்றுக்கொண்ட மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் த.பிரபு.

# சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க முன்னுரிமை அளிக்கப்படும்

## மாநகர காவல் ஆணையர்

**திருப்பூர், ஜன. 6:** திருப்பூர் மாநகரில் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று புதிய மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாநகர காவல் ஆணையராகப் பணியாற்றி வந்த எஸ்.லட்சுமி, சென்னை டிஜிபி தலைமையக விரிவாக்கப் பிரிவுக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டார். இதையடுத்து, ஆவடி தலைமையக போக்குவரத்து கூடுதல் காவல் ஆணையர் எஸ்.ராஜேந்திரன் திருப்பூர் மாநகர காவல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.



மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேந்திரன்.

இந்நிலையில், திருப்பூர் மாநகரின் 14-ஆவது காவல் ஆணையராக எஸ்.ராஜேந்திரன் திங்கள்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மாநகரில் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும், குற்றங்களைத் தடுப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும். மாநகரில் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காணவும், சாலை விபத்துகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். மாநகர மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும். திருப்பூரில் பணியாற்றி வரும் வெளிமாநிலத் தொழிலாளர்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படும். மாநகரில் சைபர் குற்றங்களைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றார்.